**தேசிய கல்வி நிறுவகம்**

**உளவளத் துணைசார் டிப்ளோமா பயிற்சி நெறி 2020/2021**

# மொடியூல் 1 (M-1) ஆலோசனை தொடர்பான உளவியல்

**திறந்த நூல் பரீட்சை (இணைய வழி)**

**உங்கள் கவனதிற்கு:**

- ♣ கால அளவு காலை 9. 00 மணி முதல் 10.00 வரை.
- ♣ **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்குக.

(1) தொழில்சார் முறை ரீதியாக மனதின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யும் துறையில் ஈடுபடும் நிபுணர்களுக்கு வழங்கப்படும் பெயர்கள்

(2) (அ) உளவிலுக்கான முதலாவது ஆய்வு கூட நிறுவுனர்

(ஆ) அது நிறுவப்பட்ட இடம்

(3) உளவியல் ஓர் குரு-குலக் கல்வியாக போதிக்கப்பட்ட நாடுகள்

(4) Psyche மற்றும் Logia என்ற இலத்தீன் பதங்களால் குறிப்பிடப்படுவது

Psych =

Logia =

(5) நடத்தைவாத கோட்பாட்டுடன் தொடர்புடைய உளவியலாளர் இருவரைக் குறிப்பிடுக.?

(6) குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சிப் பருவங்களில் ஜீன் பியாஜேயின் முதல் இரு நிலைகளையும் அவற்றுக்குரிய வயதெல்லையும்

(7) சிறுவயதில் தாய்இ தந்தையர் மீது பிள்ளைக்கு ஏற்படும் கவர்ச்சியை மனோதத்துவ ரீதியாக கார்ல் யுங் அடையாளப்படுத்தும் முறை.

(அ) பெண் குழந்தைக்கு தந்தையின் ஏற்படும் கவர்ச்சியை

(ஆ) ஆண் குழந்தைகளுக்கு தாயின் மீது ஏற்படும் கவர்ச்சியை



LIVEWORKSHEETS

(8) பின்வரும் எண்ணக்கருக்களுடன் தொடர்புடைய கோட்பாட்டாளர்கள்

(அ) மனித நடத்தையை அறிந்து கொள்வதற்கான உளப்பகுப்பாய்வு அணுகுமுறை

(ஆ) "வெவ்வேறு உடலமைப்பைக் கொண்டவர்கள் வெவ்வேறு ஆளுமையைக் கொண்டவர்கள்"

(9) சிக்மண்ட பிராய்டின் கூற்றுப்படி

(அ) இட் கொள்கைக்கு என்ற காரணிப் பகுப்பாய்வும்,

(ஆ) ஈகோவிற்கு என்ற காரணிப் பகுப்பாய்வும்

மூல காரணியாக உள்ளது.

(10) சிக்மண்ட பிராய்டின் "பாதுகாப்புப் பொறிமுறை"யின் (Defense Mechanism) இரு பண்புகள் எவை

(11) உளவள ஆலோசனை கூறலின் போது நேரடியாக தொடர்புபடும் இரு நபர்கள்

(12) வாய்மொழியற்ற நுண்ணறிவுப் பரீட்சை முறைக்கு இரு உதாரணங்களை எழுதுக.

(13) நுண்ணறிவோடு தொடர்புடைய பின்வரும் கொள்கைக்குரிய கோட்பாட்டாளர்கள்

(அ) இருகாரணிக் கொள்கை

(ஆ) பல்காரணிக் கொள்கை

(14) ஆப்ரிஹாம் மாஸ்லோ மனித தேவைகளின் படியமைப்பு (பிரமிட்) கட்டமைப்பை இரு வகையாக அடையாளப்படுத்தியுள்ளார்.

(15) கீழ்க் குறிப்பிடப்படும் காரணிகள் மாஸ்லோ மனித தேவைகளின் படியமைப்பு கட்டமைப்பையில் எந்நிலைகளுக்குரியவை

(அ) தன்னம்பிக்கை, சுய மரியாதை மற்றும் தனித்துவம்

(ஆ) தனது குறை நிறைகளை ஏற்றுக் கொள்ளல்



LIVEWORKSHEETS

(16) “ஆளுமைக் காரணிகளும் குழந்தை வளர்ப்புக்கும் இடையிலான உறவில் அக்கறை காட்டிய” கீழ்வரும் இரு உளவியலாளர்களும் முன்வைத்த கோட்பாடுகள்

(அ) பி.எப். ஸ்கின்னர்

(ஆ) ஜீன் பியாஜே

(17) பின்வருவன உள்ளத்தின் எப்பகுதிகளுக்குரிய செயற்பாடுகள் என பிராய்ட் அடையாளப் படுத்துகின்றார்

(அ) முயற்சியுடன் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடியது அல்லது உள்ளத்தின் மேற்பகுதிக்குக் கூட கொண்டுவரக் இயலுமான ஓர் பகுதி.

(ஆ) உள்ளத்தில் உள்ள நிளைவுகளை மீளக் கொண்டுவர முடியாத பகுதி.

(18) பிராய்டின் இட், அகம், அதியகம் என்ற ஆளுமை வளர்ச்சியின் மூன்று நிலைகளில் பின்வரும் இரு செயற்பாடுகளும் எந்நிலைகளுக்குரியன.

(அ) லிபிடோ எனும் காம ஆசை பலம் பெறும் நிலை.

(ஆ) சட்டங்களை மதித்து நல்லொழுக்கப் பண்புகளைப் பேணி நடத்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளல்.

(19) கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை முன்வைத்த உளவியலாளர்கள் இருவரும்

(அ) “ஆளுமை என்பது, ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்பச் சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது அவர் வெளிப்படுத்தும் உடல், உளச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்”

(ஆ) “சூழலுக்கான ஒரு தனிப்பட்டவரின் சீராக்கத்தை அல்லது பொருத்தப்பாட்டைத் தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும் சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமையாகும்”

(20) (அ) பரிசோதிக்கப்படுபவர் தானே தனது ஆளுமைப் பண்புகளை பரிசோதனை செய்து கொள்வதற்குக் கையாளும் ஆளுமையை அளவீடு நுட்ப முறை

(ஆ) மற்றவர்களினால் ஒருவரின் ஆளுமையை அளவிடப் பயன்படுத்தப்படும் ஆளுமை அளவீட்டு நுட்பமுறை

(21) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய உளவியளார்களை இனங்கண்க.

(அ) ஆளுமை பற்றிய அடுக்மைப்புக் கொள்கையை முன்வைத்தவர்

(ஆ) புறமுகம் - அகமுகம் என ஆளுமையைப் பிரித்துக் காட்டியவர்


LIVEWORKSHEETS

(22) கீழ்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய உளவியளார்களை இனங்கண்க.

(அ) "பகுத்து, தொகுத்து, ஆராய்வதற்கான திறனே நுண்ணறிவாகும்"

(ஆ) "கருத்த நிலையில் சிந்திக்கும் திறனே நுண்ணறிவாகும்"

(23) (அ) சிக்மன்ட பிராய்டின் உளரீதியான பாலியல் பருவங்களின் எண்ணிக்கை

(ஆ) அவற்றில் முதல்

மற்றும்

இறுதியான பருவம்

(24) பின்வரும் கூற்றுக்கள் உளவியல் ரீதியாக ஏற்புடையதா? இல்லையா?

(அ) அறிவாற்றல் உளவியலானது உளச் செயன்முறைகளின் மீது கவனம் செலுத்துகின்றது.

(ஆ) பெரும்பாலான நடத்தைகளுக்கு தனியானதொரு காரணி மட்டுமே உண்டு

(25) (அ) ஆயுட்காலம் முழுவதிலும் நிகழும் அறிவாற்றல், மனவெழுச்சி மற்றும் சமூக மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்யும் உளவியல் பிரிவிற்கு வழங்கப்படும் பெயர்

(ஆ) "குறித்ததொரு சந்தர்ப்பத்தின் போது வெவ்வேறுபட்ட நபர்கள் வெவ்வேறான நடத்தைப் பண்புகளை வெளிக் காட்டுகின்றார்கள்" இதற்குரிய உளவியல் பின்னணிக் காரணி

**கீழ்க் காணும் Finished என்ற அடையாளத்தைக் கிளிக் செய்து உங்கள் விடையினை**
**curiosity.mjm@gmail.com முகவரிக்கு E-mail செய்யுங்கள்**



LIVEWORKSHEETS